பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 07 2025 **MONDAY** 12 40 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தற்போதைய சர்வதேச சூழலில், இந்தியா மற்றும் சீனா இடையிலான பரஸ்பர பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெறுவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

2. கடந்த நான்காண்டு கால திமுக ஆட்சியில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. பழம்பெரும் திரைப்பட நடிகை சரோஜாதேவி இன்று காலமானார். அவரது மறைவுக்கு அரசியல் தலைவர்களும், திரையுலக பிரபலங்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

4. யுக்ரைன் நாட்டுக்கு **Patriot** ஏவுகணைகளை வழங்கவிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

5. கத்தார் நாட்டுக்கு எதிரான இரண்டாவது நட்புறவு கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா 97-95 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றிபெற்றது.

**<<<<<<>>>>>>**

சர்வதேச அளவில் சிக்கலான சூழல் நிலவி வரும் நிலையில், இந்தியா மற்றும் சீனா இடையிலான பரஸ்பர பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக சீனா சென்றுள்ள அவர், அந்நாட்டு துணை அதிபர் திரு. **Han Zheng-**ஐ இன்று பெய்ஜிங்கில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் சீனாவின் தலைமைக்கு இந்தியா ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவு சுமுகமாக தொடர்வது பரஸ்பரம் பலன் அளிப்பதாக இருக்கும் என்று கூறினார்.

கடந்த அக்டோபர் மாதம், **Kazan** நகரில் சீன அதிபர் திரு. **Xi JinPing-** ஐ பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்துப் பேசிய பிறகு, இருநாடுகள் இடையேயான உறவு வியக்கத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தமது இந்தப் பயணம், மேலும் பல நல்ல மாற்றங்களுக்கு வித்திடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கிடையே, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைமைச் செயலர் திரு. **Nurlan Yermekbayav**-ஐ டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேச்சு நடத்தினார்.

அப்போது, அந்த அமைப்பின் முக்கியத்துவம், பங்களிப்பு மற்றும் அதனை நவீனப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து இருவரும் விவாதித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கடந்த நான்காண்டு கால திமுக ஆட்சியில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் நடந்த முருக பக்தர்கள் மாநாடு, மிகப் பெரிய எழுச்சியை ஏற்படுத்தியிருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>>

பழம்பெரும் திரைப்பட நடிகை சரோஜாதேவி கர்நாடக மாநிலம், மல்லேஸ்வரத்தில் இன்று காலமானார். அவருக்கு வயது 87.

தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி மொழிகளில் 200-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ள இவருக்கு பத்மஸ்ரீ, பத்மபூஷன் விருதுகளை வழங்கி அரசு கௌரவித்துள்ளது.

தமிழில் சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர். ஜெமினிகணேசன் உள்ளிட்ட நடிகர்களுடன் நடித்துள்ள இவரது திரைப்படங்கள் மக்களால் என்றும் நினைவுகூரப்படுகிறது.

சரோஜாதேவியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தமது நடிப்பால் தமிழக மக்களின் மனதில் அவர் நீங்கா இடம் பிடித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

சரோஜாதேவியின் மறைவுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அபிநய சரஸ்வதி, கன்னடத்து பைங்கிளி என்று தென்னிந்திய ரசிகர்களால் அவர் போற்றப்பட்டதாக தமது இரங்கல் செய்தியில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சரோஜா தேவியின் மறைவுக்கு பல்வேறு திரையுலக பிரபலங்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>

நைஜீரிய முன்னாள் அதிபர் முஹமது புகாரியின் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அவருடனான தமது சந்திப்புகள் மற்றும் விவாதங்களை நினைவு கூர்ந்துள்ளார்.

இந்தியா - நைஜீரியா நல்லுறவை வலுப்படுத்துவதில் அவரது அர்ப்பணிப்புமிக்க செயல்பாடு ஈடு இணையற்றது என்று பிரதமர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

அமர்நாத் புனித யாத்திரையை கடந்த 11 நாட்களில் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் மேற்கொண்டுள்ளனர்.

இன்று பகவதி நகர் முகாமிலிருந்து 6 ஆயிரத்து 143 பேர் யாத்திரை மேற்கொண்டிருப்பதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அமர்நாத் யாத்திரிகர்களின் பாதுகாப்பை முன்னிட்டு, 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த யாத்திரை அடுத்த மாதம் 9ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

<<<<<<>>>>>>

ஆந்திர மாநிலம், அன்னமய்யா மாவட்டத்தில் நேரிட்ட விபத்தில் 9 தொழிலாளர்கள் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.

ராஜம்பேட் அருகே, மாம்பழம் ஏற்றி வந்த சரக்கு லாரி ஒன்று, ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் கவிழ்ந்து இந்த விபத்து நேரிட்டதாகவும், விபத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள ஆந்திர மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மண்டிப்பள்ளி ராம்பிரசாத் ரெட்டி, விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

<<<<<<>>>>>>

ஈரான் தலைநகர் டெஹ்ரான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் அந்நாட்டு அதிபர் திரு. **Masoud Pzeshkian** காயமடைந்ததாக அந்நாட்டு ராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். கடந்த மாதம் 13ஆம் தேதி அங்கு நடைபெற்ற தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தை குறிவைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவசர வழி மூலம் அதிபர் தப்பிக்க முயன்ற போது அவருக்கு காலில் காயமேற்பட்டதாகவும் அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதலில் ஈரான் நாட்டு மூத்த ராணுவ அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

<<<<<<>>>>>>

யுக்ரைன் நாட்டுக்கு **Patriot** ஏவுகணைகளை வழங்கவிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் **Maryland-**ல் செய்தியாளர்களிடம் பேசிய அவர், யுக்ரைன் நாட்டின் பாதுகாப்பு கருதி **Patriot** ஏவுகணைகளை வழங்கும் முடிவை அமெரிக்கா மேற்கொண்டிருப்பதாகவும், ஏவுகணைகளின் எண்ணிக்கை குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் தொடர்ந்து யுக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் நிலையில், இந்த முடிவை அமெரிக்கா எடுத்திருப்பதாக திரு. டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சூடானில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவத்தில் 18 பேர் உயிரிழந்தனர், 31 பேர் காயமடைந்தனர்.

அங்குள்ள இரண்டு படையினரிடையே இந்த மோதல் ஏற்பட்டதாகவும், சர்வதேச விதிமுறைகள் மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான வழிமுறைகளை மீறும் வகையில் பொதுமக்கள் மீது அவர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>

கத்தார் நாட்டுக்கு எதிரான இரண்டாவது நட்புறவு கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா வெற்றிபெற்றது.

தோஹாவில் நடைபெற்ற இப்போட்டியில், 97க்கு 95 என்ற புள்ளிக்கணக்கில் அந்த அணியை வென்றது.

<<<<<<>>>>>>

இங்கிலாந்துக்கு எதிரான 3வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் நேற்று 4ஆம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 58 ரன் எடுத்துள்ளது.

லார்ட்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 193 ரன் என்ற இலக்கோடு இந்தியா இன்று ஆட்டத்தை தொடரவுள்ளது. இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 387 ரன்னும், இரண்டாவது இன்னிங்ஸிலும் 192 ரன்னும் எடுத்துள்ளது. இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 387 ரன் எடுத்தது.

<<<<<<>>>>>>

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியின் 20 வயதுக்குட்பட்டோருக்கான ப்ரீ ஸ்டைல் பிரிவில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

கிர்கிஸ்தானின் **Bishkek**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

57 கிலோ பிரிவில் **Ankush**-ம், 79 கிலோ எடைப்பிரிவில் **Amit**-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

65 கிலோ எடைப்பிரிவில் அஷ்வனி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

70 கிலோ எடைப்பிரிவில் சவ்ரப்பும், 86 மற்றும் 92 கிலோ எடைப்பிரிவில் விஷாலும், 125 கிலோ எடைப்பிரிவில் **Jaspooran Singh**-ம் வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றினர்.

இப்போட்டியின் இந்தியா 10 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<<<END>>>>>>